முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2018 சனவரி

## (AA32) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2018-01-21
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 09

- **அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள்* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களுக்குத்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) ***கணித அட்டவணைகள்*** *வழங்கப்படும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

இந்தப் பகுதியிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.
(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

“வருமானங்கள் ஊதிய வருமானம் (earned income), முதலீட்டுத்தொகுதி வருமானம் (portfolio income) இலகுவான வருமானம் (passive income) என மூன்று வகைப்படும். இந்த ஒவ்வொரு வருமான வகையும் அவற்றிற்கு உரிய அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் கொண்டுள்ளன.”

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) ‘‘ஊதிய வருமானம்’’ எனும் பதத்தினை இரண்டு (02) உதாரணங்கள் தந்து **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) ஊதிய வருமானத்தின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் ஒவ்வொன்றினைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

“செயற்பாட்டு அளவிடலுக்கான சமநிலைப் புள்ளி அட்டை (Balance Scorecard [BSC]) அணுகுமுறையானது வாடிக்கையாளர் கண்ணோட்டம், அகச் செயன்முறைக் கண்ணோட்டம், கண்டுபிடித்தல் மற்றும் கற்கைக் கண்ணோட்டம் மற்றும் நிதிக் கண்ணோட்டம் ஆகிய நான்கு வேறுபட்ட கண்ணோட்டங்களில் கவனம் செலுத்துகிறது.”

**நீங்கள் செய்யவேண்டியது:**

சமநிலைப் புள்ளி அட்டையின், நிதிக் கண்ணோட்டத்திற்கான செயற்பாட்டு அளவிடல் முறைகளுக்கு மூன்று (03) உதாரணங்களையும் வாடிக்கையாளர் கண்ணோட்டத்திற்கான செயற்பாட்டு அளவிடல் முறைகளுக்கு இரண்டு (02) உதாரணங்களையும் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

## வினா 03

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் **வரையறுக்கப்பட்ட ரீனா கம்பனியின்** 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதித் தகவல்களிலிருந்து பிரித்தறியப்பட்டன:

| | **2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு** |
|---|---|
| தொக்குப் புரள்வு | 5 தடவைகள் |
| வியாபார வருமதிகள் புரள்வு | 8 தடவைகள் |
| வியாபார சென்மதிகள் தீர்ப்பனவு காலம் | 20 நாட்கள் |

*(ஆண்டில் 365 நாட்களெனக் கொள்க.)*

**நீங்கள் செய்யவேண்டியது:**

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்படு மூலதன சுற்றுக்காலத்தைக் (length of the working capital cycle) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

கீழே தரப்பட்டுள்ள இலாப மதிப்பீடுகள் **ரொப் ஹோல்டிங் PLC** யின் பிந்தைய மூலதன முதலீட்டுச் செயற்றிட்டம் பற்றியதாகும்:

| **ஆண்டு** | **இலாபம் (ரூ. மில்லியன்)** |
|---|---|
| 1 | 90 |
| 2 | 180 |
| 3 | 170 |
| 4 | 20 |

இந்தச் செயற்றிட்டத்தின் இயந்திரம் மீதான ஆரம்ப மூலதன முதலீடு ரூ.850 மில்லியன் ஆகும். இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 4 ஆண்டுகளாகவும், நான்காவது ஆண்டு முடிவில் இயந்திரத்தின் ஒடிவுப் பெறுமதி ரூ.250 மில்லியனாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கம்பனியானது 4 ஆண்டு பயன்தரும் ஆயுட்காலமீறாக நேர்கோட்டு அடிப்படையில் இயந்திரத்தினை தேய்மானம் செய்கிறது.

(மேலே தரப்பட்டுள்ள இலாபங்கள், எந்திரம் மீதான தேய்மானம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் கணிப்பிடப்பட்டவையாகும்.)

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) ஆண்டு 0 முதல் ஆண்டு 4 வரையான காலத்திற்கு காசுப் பாய்வுகளை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) செயற்றிட்டத்தின் மீள்செலுத்துகைக் காலத்தினைக் (Payback period) **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

இந்தப் பகுதியிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

**வரையறுக்கப்பட்ட NH கம்பனியானது** அரசாங்கத்தினால் விதிக்கப்படும் விலையிடல் வழிகாட்டல்களுக்கு அமைவாக கோழிப்பண்ணைப் பொருளொன்றை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. அடுத்த ஆண்டிற்கான பாதீட்டினைத் தயாரித்தலில் முகாமை இப்போது ஈடுபட்டுள்ளது. இந்த ஆண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| விற்பனை விலை | கிலோகிராமொன்று ரூ.500/- |
| வருடாந்த விற்பனை | 120,000 கிலோகிராம் |
| மாறும் கிரயம் | கிலோகிராமிற்கு ரூ.220/- |
| ஆண்டிற்கான மொத்த நிலையான கிரயம் | ரூ.15,000,000/- |

அடுத்த ஆண்டிற்கான அரசாங்கத்தின் புதிய விலைகள் மிக விரைவில் அறிவிக்கப்பட உள்ளதுடன் விலை அதிகரிப்பானது 8% க்கும் 15% க்கும் இடையில் இருக்கலாம் எனவும் அதிக சாத்தியம் 10% அதிகரிப்பாக இருக்கலாமென விற்பனை முகாமையாளர் நம்புகிறார். அடுத்த ஆண்டில் வருடாந்த விற்பனை வளர்ச்சி 2% ஆக எதிர்பார்க்கப்படுவதுடன் அதிக சாத்தியமானது 4% ஆகவும் பாதிப்பான நிலையில் வீழ்ச்சி 3% ஆக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மாறும் மற்றும் நிலையான கிரயங்கள் நாட்டின் பணவீக்கத்திற்கு ஆளாகின்றன. அடுத்த ஆண்டில் பணவீக்கம் 6% ஆக இருக்குமென மத்திய வங்கி மதிப்பிட்டுள்ளது. எனினும் சில அரசாங்க கொள்கைத் திட்டங்களின்படி அது 5% மற்றும் 8% க்கு இடையில் மாறுபடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

*(ஆண்டின் ஆரம்பத்திலோ, இறுதியிலோ தொக்குகள் இல்லையெனக் கொள்க.)*

***நீங்கள் செய்யவேண்டியது:***

அடுத்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட NH கம்பனியின்** மூன்று அடுக்குப் பாதீட்டினைத் (three tier budget) ***தயாரிக்குக.*** (10 புள்ளிகள்)

### வினா 06

***வ/ப சுப்பர் ஜுஸ் கம்பனியானது*** ஒரே எந்திரத்தினைப் பயன்படுத்தி **ஜுஸ் A, ஜுஸ் B, ஜுஸ் C** எனும் மூன்று வேறுபட்ட வகையான ஆரோக்கியமளிக்கும் பழச்சாறுகளை உற்பத்தி செய்து பெரிய அட்டைப் பெட்டிகளில் விற்பனை செய்கிறது. அடுத்த மாதத்திற்கான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

| | **ஜுஸ் A** | **ஜுஸ் B** | **ஜுஸ் C** |
|---|---|---|---|
| அலகொன்றின் விற்பனை விலை (ரூ.) | 8,500 | 12,500 | 6,300 |
| அலகொன்றிற்கான நேர்பொருட்கள் (ரூ.) | 3,800 | 6,900 | 3,200 |
| அலகொன்றிற்கான நேர்கூலி (மணித்தியாலத்திற்கு ரூ.400/- வீதம்) (ரூ.) | 400 | 480 | 320 |
| அலகொன்றிற்கான மாறும் மேந்தலை (ரூ.) | 400 | 400 | 400 |
| அலகொன்றிற்கு எந்திர மணித்தியாலத் தேவைப்பாடு (மணித்தியாலம்) | 0.40 | 0.60 | 0.30 |
| மாதாந்தக் கேள்வி (அலகுகள்) | 4,000 | 3,800 | 4,500 |

அடுத்த மாதத்திற்கு கிடைக்கத்தக்க கூலி மணித்தியாலங்களும் எந்திர மணித்தியாலங்களும் முறையே 11,000 மணித்தியாலங்கள் மற்றும் 7,000 மணித்தியாலங்களாக மதிப்பிடப்பட்டுள்ளன.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) அடுத்த மாத உற்பத்தித் திட்டத்தில் **வ/ப சுப்பர் ஜுஸ் கம்பனியின்** வரையறைக் காரணியை / காரணிகளை (limiting factor/s) **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(b) கிடைக்கப்பெறும் வளங்களின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையைக் (Optimal production mix) **கணிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

முன்னணி மென்பான உற்பத்தியாளரான **வ/ப ரின்கோ கம்பனியானது** புதிய வகை மென்பானங்களை உற்பத்தி செய்யும் புதிய எந்திரமொன்றில் முதலீடு செய்ய எண்ணுகிறது. எந்திரத்தின் எதிர்பார்க்கப்படும் கிரயம் ரூ.9,000,000/- ஆக உள்ள அதேவேளை கணக்கீட்டு இலாபம் (வரிகளுக்கு முன்) கீழ்வருமாறு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது:

| **ஆண்டு** | **கணக்கீட்டு இலாபம் (வரிகளுக்கு முன்) (ரூ.)** |
|---|---|
| 1 | 2,100,000 |
| 2 | 2,500,000 |
| 3 | 2,800,000 |
| 4 | 3,100,000 |
| 5 | 2,600,000 |

எந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 5 ஆண்டுகள் முடிவில் ஒடிவுப் பெறுமதி எதுவும் இல்லை.

வரித் தேவைகளுக்காக பிரயோகிக்கக்கூடிய மூலதனப் படி வீதம் (capital allowance rate) ஆண்டிற்கு 25% ஆவதுடன் கம்பனியானது கணக்கீட்டுத் தேவைகளுக்காக இந்த எந்திரத்தினை நேர்கோட்டு அடிப்படையில் 5 ஆண்டுகள் ஈறாக தேய்மானம் செய்கிறது. மேலே தரப்பட்டுள்ள கம்பனியின் இலாபங்கள் எந்திரம் மீதான தேய்மானம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் கணிப்பிடப்பட்டவையாகும். **வ/ப ரின்கோ கம்பனியின்** வருமான வரி வீதம் 28% ஆவதுடன் ஆண்டிற்கான கம்பனியின் வருமான வரிப் பரிப்பு அதே ஆண்டில் செலுத்தப்படும்.

கம்பனியின் மூலதனக் கிரயம் - 10%.

**நீங்கள் செய்யவேண்டியது:**

நிகர இற்றைப் பெறுமதி (NPV) கணிப்பீட்டினை ஆதாரமாகக் கொண்டு புதிய எந்திரத்தில் முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறினை (viability) **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

இப்பகுதியிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

(A) ***வ/ப கப் கம்பனி*** விளையாட்டு மற்றும் பிற ஊக்குவிப்பு நிகழ்வுகளுக்காக தொப்பிகளைத் தயாரிக்கின்றது. வாடிக்கையாளர்கள் வழங்கும் பரிமாணங்களின் அடிப்படையில் தொப்பிகள் தயாரிக்கப்படும். பாடசாலையொன்று அதன் விளையாட்டுப் போட்டிக்காக அடுத்த 6 நாட்களுக்குள் ஒவ்வொன்றும் ரூ.200/- விலைப்படி 9000 தொப்பிகளை தயாரிப்பதற்கான கட்டளையுடன் **வ/ப கப் கம்பனியை** அணுகியுள்ளது. இந்தக் கட்டளைக்கான வளத் தேவைப்பாடுகள் கீழ்வருமாறு இனங்காணப்பட்டுள்ளன:

- பொருட்கள் - தொப்பியொன்றிற்கு 0.4 மீற்றர் **பொருள் X** தேவைப்படும். இந்தப் பொருள் வழக்கமாக கம்பனியால் பயன்படுத்தப்படாதபோதிலும் ஒரு மீற்றர் ரூ.180/- விலைப்படி சில ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட 1400 மீற்றர் **பொருள் X** கம்பனியின் களஞ்சியத் தொக்கில் உள்ளது. இந்தப் பொருள் குறிப்பிட்ட கட்டளைக்குப் பயன்படுத்தப்படாத இடத்து ஒரு மீற்றர் ரூ.45/- விலையில் ஒடிவுப் பொருளாக விற்பனை செய்யப்படலாம். இந்தப் **பொருள் X** இன் நடப்புச் சந்தை விலை மீற்றர் ஒன்று ரூ.250/- ஆகும்.
- கூலி – ஒரு தொப்பியைத் தயாரிப்பதற்கு 15 நிமிட கூலி நேரம் தேவைப்படுமென மதிப்பிடப் பட்டுள்ளது. இந்தக் கட்டளை அவசரமாக தேவைப்படுவதால் **வ/ப கப் கம்பனி** தொழிற்சாலை ஊழியரை மேலதிக நேரம் வேலையில் ஈடுபடுத்துவதற்கு 500 மணித்தியால மேலதிக நேரக் கொடுப்பனவினை சாதாரண கொடுப்பனவின் 1.5 மடங்கு வீதத்தில் செலுத்த வேண்டியிருக்கும். தற்போது தொழிற்சாலை ஊழியர்களுக்கு மணித்தியாலமொன்றுக்கு ரூ.160/- செலுத்தப்படுகிறது. இந்தக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் கம்பனி கிரமமான கட்டளையொன்றினை (regular order) அடுத்த வாரத்திற்கு பிற்போடவேண்டி ஏற்படுவதுடன், கிரமமான கட்டளையை உரிய காலத்தில் முடிப்பதற்கு ஊழியர்கள் 300 மணித்தியாலம் மேலதிகமாக (மேலதிக நேரம்) வேலைசெய்ய வேண்டியிருக்கும்.
- மேற்பார்வையாளர் - தொழிற்சாலை ஊழியர்கள் தொழிற்சாலை மேற்பார்வையாளர் ஒருவரால் மேற்பார்வை செய்யப்படுவதுடன் அந்த மேற்பார்வையாளருக்கு நிலையான மாதாந்தச் சம்பளமாக ரூ.90,000/- செலுத்தப்படும்.
- மேந்தலைகள் - மாறும் மேந்தலைகள் கூலி மணித்தியாலமொன்றிற்கு ரூ.80/- வீதம் இறுக்கப் படுகின்றன. கிரமமான கட்டளைகளிலிருந்து இந்தக் கட்டளையின் வடிவமைப்பு வேறுபடுவதால் இந்தக் கட்டளையைப் பூர்த்தி செய்வதற்கு விசேட எந்திரமொன்று வாடகைக்குப் பெறவேண்டியுள்ளதுடன் இதற்கு 6 நாட்களுக்கு நாளொன்றிற்கு ரூ.8,500/- வீதம் செலுத்துதல் வேண்டும்.
- வடிவமைப்புக் கிரயம் - இந்தக் கட்டளைக்காக தேர்வு செய்யப்பட்ட வடிவமைப்பானது ரூ.120,000/- கிரயத்தில் சில ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்டதாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

கணிப்பீடுகளை ஆதாரமாகக் கொண்டு **வ/ப கப் கம்பனி** இந்தக் கட்டளையை ஏற்றுக்கொள்ள வேண்டுமா, இல்லையா என்பதை காரணங்களுடனும் **மதிப்பீடு செய்க.**

*(உமது கணிப்பீட்டில் பயன்படுத்திய தொடர்புடைய கிரய மூலகம் மற்றும் தொகைகளை தெளிவாகக் குறிப்பிடுக.)* (12 புள்ளிகள்)

(B) **வ/ப ரெக்ஸ் கம்பனி** புதிய பொருளொன்றை 2018 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்த எண்ணுகிறது. இந்தப் பொருளை மே 2018 இல் அறிமுகப்படுத்துவதற்கான நிகழ்தகவு 40% ஆக உள்ள அதே வேளை அது தவறும் பட்சத்தில் பொருள் யூலை 2018 இல் அறிமுகப்படுத்தப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தைப்படுத்தற் பிரிவானது ரூ.295,000/- செலவுசெய்து விளம்பர இயக்கத்தினை முன்னெடுக்க உள்ளதுடன் அறிமுகப்படுத்தப்படும் காலத்தினைப் பொறுத்து விளம்பரத்துடனும் விளம்பரம் இல்லாமலும் எதிர்பார்க்கப்படும் பங்களிப்பு மட்டங்கள் கீழ்வருமாறு:

| **தருநிலை** | | **நிகழ்தகவு** | **பங்களிப்பு (ரூ.) அறிமுகப்படுத்துதல்** | |
|---|---|---|---|---|
| | | | **2018 மே எனின்** | **2018 யூலை எனின்** |
| விளம்பரத்துடன் | உயர்ந்த | 70% | 1,450,000 | 1,200,000 |
| | தாழ்ந்த | 30% | 860,000 | 700,000 |
| விளம்பரம் இல்லாது | உயர்ந்த | 50% | 1,300,000 | 1,000,000 |
| | தாழ்ந்த | 50% | 650,000 | 550,000 |

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) **வ/ப ரெக்ஸ் கம்பனி** மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்களைப் பிரதிபலிக்கும் தீர்மான மர (Decision Tree) வரைபினை **வரைக.** விளம்பர இயக்கம் முன்னெடுக்கப்பட வேண்டுமா என்பது, அறிமுகப்படுத்தற் திகதி உறுதிசெய்யப்பட்டதும் தீர்மானிக்கப்படும் எனக் கொள்க. (09 புள்ளிகள்)

(b) பின்வரும் தீர்மானத்தை **மதிப்பிடுக.**

**2018 மே** இல் பொருளை அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்படுமிடத்து விளம்பர இயக்கம் முன்னெடுக்கப்பட வேண்டுமா? (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) **பொருள் X** இனை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் **வ/ப புரொடெக்ஸ் கம்பனியின்** 2017 ஆம் ஆண்டிற்கான நியமக் கிரய அட்டை மற்றும் பாதிடப்பட்ட தகவல்களிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன.:

| | |
|---|---|
| அலகொன்றின் விற்பனை விலை (ரூ.) | 800 |
| அலகொன்றின் நேர்பொருள் (கி.கிராம். ரூ.75/- வீதம் 4 கி.கிராம்) (ரூ.) | (300) |
| அலகொன்றின் நேர்கூலி (மணித்தியாலம் ரூ.250/- வீதம் 1 மணித்தியாலம்) (ரூ.) | (250) |
| அலகொன்றின் மாறும் மேந்தலை (மணித்தியாலம் ரூ.120/- வீதம்) (ரூ.) | (120) |
| அலகொன்றின் பங்களிப்பு (ரூ.) | 130 |
| ஆண்டிற்கான நிலையான மேந்தலை (ரூ.) | 750,000 |
| பாதிடப்பட்ட ஆண்டு விற்பனை (அலகுகள்) | 11,000 |

2017 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த 12 மாத காலத்திற்காக தயாரிக்கப்பட்ட முகாமைக் கணக்குகளிலிருந்து பிரித்தறியப்பட்ட கீழ்வரும் தகவல்கள் **வ/ப புரொடெக்ஸ் கம்பனியின்** முகாமைக் கணக்காளரால் உமக்குத் தரப்பட்டுள்ளது:

| | ரூ. |
|---|---|
| விற்பனை (10,850 அலகுகள்) | 9,135,700 |
| நேர் பொருட்கள் (41,360 கி.கிராம்) | 3,308,800 |
| நேர் கூலி (மணித்தியாலத்திற்கு ரூ.220/-) | 2,681,800 |
| மாறும் மேந்தலைகள் | 1,278,900 |
| பங்களிப்பு | 1,866,200 |
| நிலையான மேந்தலை | 778,630 |

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) கீழ்வரும் முரண்களைக் **கணிக்குக.**

(i) விற்பனை விலை முரண் (Sales Price Variance) (02 புள்ளிகள்)

(ii) விற்பனைக் கனவளவு எல்லை முரண் (Sales Volume Margin Variance) (02 புள்ளிகள்)

(iii) நேர் பொருள் விலை முரண் (Direct Material Price Variance) (02 புள்ளிகள்)

(iv) நேர் பொருள் பாவனை முரண் (Direct Material Usage Variance) (02 புள்ளிகள்)

(v) நேர் கூலி வீத முரண் (Direct Labour Rate Variance) (02 புள்ளிகள்)

(vi) நேர் கூலி வினைத்திறன் முரண் (Direct Labour Efficiency Variance) (02 புள்ளிகள்)

(b) மேலே கணிப்பிடப்பட்ட முரண்களுடன் கீழ்வரும் மேலதிகத் தகவல்களையும் பயன்படுத்தி, பாதிடப்பட்ட பங்களிப்பை உண்மைப் பங்களிப்புடன் கணக்கிணக்கம் செய்வதற்காக தொழிற் பாட்டுக் கூற்றினைத் (operating statement) **தயாரிக்குக**:

| உருப்படி | ரூ. |
|---|---|
| மாறும் மேந்தலை செலவின முரண் | 75,950 பாதகம் |
| மாறும் மேந்தலை வினைத்திறன் முரண் | 99,050 சாதகம் |
| நிலையான மேந்தலை செலவின முரண் | 28,630 பாதகம் |

(05 புள்ளிகள்)

(B) விலைகுறிக்கப்பட்ட பொதுக் கம்பனியான (quoted public company) **ரீஜென்ட் PLC** யின் 2017 மார்ச் 31 ஆந் திகதியின் படியான நிதிநிலைக் கூற்றிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன:

| | ரூ. |
|---|---|
| சாதாரண வாக்குரிமைப் பங்குகள் (225 மில்லியன் சாதாரண பங்குகள்) | 3,375,000,000 |
| மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள் (65.5 மில்லியன் பங்குகள்) | 524,000,000 |
| நிரற்படுத்தப்பட்ட தனிச்சங்கள் (ஆண்டிற்கு 12% கூப்பன் வீதத்தினைக் கொண்ட 40 மில்லியன் தனிச்சங்கள்) | 4,000,000,000 |

கீழேயுள்ள மேலதிக தகவல்களும் கிடைக்கப்பெற்றுள்ளன:

(1) நிதியாண்டு 2016/17 க்கு **ரீஜென்ட் PLC** சாதாரண பங்கு ஒவ்வொன்றிற்கும் ரூ.2.80 வீதம் பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்தி செலுத்தியிருந்தது. சாதாரண பங்குகள் மீதான பங்கிலாபம் ஆண்டிற்கு 5% ஆல் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(2) சாதாரண பங்குகளும் முன்னுரிமைப் பங்குகளும் முறையே ரூ.21/- மற்றும் ரூ.12/- விலைகளில் தற்போது கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்றன.

(3) முன்னுரிமைப் பங்கொன்றிற்கான வருடாந்த பங்கிலாபம் ரூ.1.20 ஆகும்.

(4) தனிச்சங்கள் தற்போது தனிச்சமொன்று ரூ.98/- விலையில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுவதுடன் இன்னும் இரண்டு ஆண்டுகளில் (2018/19) ரூ.100/- விலையில் மீட்கப்படக்கூடியது.

*(வரிவிதிப்பை கணக்கிற் கொள்ளவேண்டியதில்லை.)*

**நீங்கள் செய்யவேண்டியவை:**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக**:

(a) சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம் (Cost Ordinary Voting Shares) (03 புள்ளிகள்)

(b) மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் (Cost of Irredeemable Preference Shares) (02 புள்ளிகள்)

(c) நிரற்படுத்தப்பட்ட தனிச்சங்களின் கிரயம் (Cost of Listed Debentures) (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |